www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

மா.வெங்கடேசன் M.A.,M.Phil., B.Ed. முதுகலை ஆசிரியர் ( வரலாறு ) அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, அயப்பாக்கம்.

# அரையாண்டுத் தேர்வு – 2024 +2

## திருவள்ளூர் மாவட்டம்.

## வரலாறு

நேரம் : 3 மணி மொத்த மதிப்பெண்கள் : 90

I. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 20 X 1 = 20

| | |
|---|---|
| 1. (இ) சென்னைவாசிகள் சங்கம் - 1852 | 11. (இ) டிசம்பர் 9, 1946 |
| 2. (இ) பாரதியின் குருமணி (ஆசிரியர்) சுவாமி விவேகானந்தராவார். | 12. (இ) வினோபா பாவே |
| 3. (இ) லாலாலஜபதிராய் | 13. (ஈ) கரிபால்டி |
| 4. (ஆ) iii, ii, i, iv | 14. (ஈ) மூன்றாம் பால் |
| 5. (அ) ஏப்ரல் 6, 1930 | 15. (ஈ) ரோஜர் பேக்கன் - டெக்கமரான் |
| 6. (அ) 1855 | 16. (அ) I மற்றும் II |
| 7. (ஈ) 22 டிசம்பர், 1939 | 17. (அ) பாரிஸ் |
| 8. (அ) யாமமோடோ | 18. (ஈ) மான்டிநீக்ரோ |
| 9. (அ) கூற்று மற்றும் காரணம் சரி; காரணம் கூற்றை விளக்குகிறது | 19. (இ) சார் |
| 10. (ஆ) பட்டாபி சீத்தாராமையா | 20 (அ). ஆல்பிரட் சாவே |

II. ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். வினாஎண் 30 க்கு கட்டாயம் விடையளிக்கவும். 7 X 2 = 14

21. ஆங்கிலப் பாராளுமன்றத்திற்குச் சென்னைவாசிகள் சங்கத்தினர் அளித்த கோரிக்கைகள் என்ன?
- ரயத்துவாரி, ஜமீன்தாரி முறைகளின் குறைகளை சுட்டிக் காட்டினர்.
- நீதித்துறையின் தாமதத்தையும், சிக்கல்களையும் சுட்டிக் காட்டினர்.
- விவசாயிகளை பாதுகாக்க பண்டைய கிராம முறையை மீட்டெடுக்க வலியுறுத்தினர்.

22. தீவிர தேசியவாதம் 1908க்குப் பின்னர் ஏன் குறைந்தது?
- இந்து மத நம்பிக்கைகளால் முலாம் பூசப்பட்ட தேசப்பற்றை முஸ்லீம்கள் ஏற்கவில்லை.
- சுதேசி இயக்கத் தலைவர்கள் சமூகத்தின் பெரும் பகுதி மக்களை ஊடுருவத் தவறினர்.
- 1907இல் ஏற்பட்ட சூரத் பிளவு தீவிர தேசியவாதத்தின் வீழ்ச்சிக்கு வழிவகுத்தது.

23. கிலாஃபத்இயக்கம் துவங்குவதற்கான பின்னணி என்னவாக இருந்தது?
- முதல் உலகப்போரின் முடிவில் கலீபாவின் ஆளுமை முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.
- கலீபாவின் அதிகாரத்தைத் துண்டாடுவது இசுலாம் மீதான பெரும் தாக்குதலாகக் கருதப்பட்டது.
- எனவே ஆட்டோமன் அரசை ஆதரித்து இந்தியாவில் கிலாஃபத் இயக்கம் தொடங்கப்பட்டது.

24. காந்தி-இர்வின் ஒப்பந்தத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்டது எது?
- உப்பைச் சுய பயன்பாட்டுக்குப் பயன்படுத்த மக்களை அனுமதிப்பது.
- வன்முறையில் ஈடுபடாத அரசியல் கைதிகளை விடுதலை செய்வது.
- சாராயம் மற்றும் அந்நியத் துணிகளை விற்கும் கடைகளின் முன் ஆர்ப்பாட்டம் நடத்த அனுமதிப்பது.

25. சிம்லா மாநாட்டின் பேச்சுவார்த்தைகள் ஏன் முறிந்தன?
- அரசபிரதிநிதியின் குழுவிற்கு உறுப்பினர்களை அனுப்புவதில் காங்கிரசிற்கும், முஸ்லிம் லீக்கிற்கும் இடையே சிக்கல் எழுந்தது.
- முஸ்லிம் லீக் தனக்கு மட்டுமே இஸ்லாமியப் பிரதிநிதிகளை நியமிக்க உரிமை உள்ளது என்று வாதிட்டது.
- காங்கிரஸ் இந்துக்களை மட்டுமே நியமிக்க முடியும் என்ற முஸ்லிம் லீக்கின் வாதத்தை காங்கிரஸ் ஏற்க மறுத்தது.

26. அரசமைப்பு நிர்ணய சபையின் அமைப்பினை விளக்குக?
- இந்திய அரசமைப்பு நிர்ணய சபை 1946 இல் ஏற்படுத்தப்பட்டது.
- அரசியல் நிர்ணய சபை உறுப்பினர்கள் மறைமுகமாக மாகாண சட்டமன்ற உறுப்பினர்களால் தெரிவு செய்யப்பட்டனர்.
- அரசமைப்பு நிர்ணயசபையின் தலைவராக இராஜேந்திர பிரசாத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

27. பாஸ்டன் தேநீர் விருந்து குறித்து நீங்கள் அறிந்ததென்ன?
- பாஸ்டன் படுகொலையைத் தொடர்ந்து 100 கிளர்ச்சியாளர்கள் பூர்வகுடி அமெரிக்கர்களைப் போல வேடம் தரித்தனர்.
- அவர்கள் பாஸ்டன் துறைமுகத்தில் இருந்த மூன்று கப்பல்களில் ஏறினர்.
- அக்கப்பல்களிலிருந்த 342 தேயிலை பெட்டிகளைக் கடலுக்குள் வீசி எறிந்தனர்.

28. ஸோல்வரின் (Zollverein) எனப்படுவதன் முக்கியத்துவம் யாது?
- பிரஷ்யா ஸோல்வரெய்ன் என்ற சுங்க ஐக்கியத்தை ஏற்படுத்தியது.
- பெரும்பாலான ஜெர்மானிய பகுதிகள் இதில் இணைந்தன.
- இதனால் இப்பகுதிகள் ஒரு பொதுப் பொருளாதார நிர்வாகத்தின் கீழ் வரும் சூழல் உருவானது.

29. ஜட்லாந்துப் போரின் முக்கியத்துவம் பற்றி எடுத்தியம்புக
- கடற்போரான இது டென்மார்க்கின் ஜட்லாந்து தீபகற்பத்திற்கு அருகில் நடந்தது.
- இப்போர் முடிவுபடாத ஒரு போராக இருந்தது.
- ஜட்லாந்து போர் முதல் உலகப்போரின் மிகப்பெரும் கடற்போராக நினைவில் கொள்ளப்படுகிறது.

30. முக்கூட்டு நட்பு நாடுகளை எழுதுக.
- பிரிட்டன், பிரான்சு, ரஷ்யா

III. ஏதேனும் ஏழு வினாக்களுக்கு விடையளிக்கவும். வினாஎண் 40 க்கு கட்டாயம் விடையளிக்கவும். 7 X 3 = 21

31. மெக்காலேயின் 'இந்தியக் கல்வி குறித்தகுறிப்புகளை' ஆய்க.
- மெக்காலே ஆங்கில மரபுக் குழுவின் கருத்துக்கு ஆதரவாக இருந்தார்.
- இந்தியர்கள் விருப்பம், ஒழுக்கம் மற்றும் அறிவில் ஆங்கிலேயராய் இருக்க விரும்பினார்.
- ஆங்கில வழியில் மேற்கத்தியக் கல்வி கற்பிக்கப்பட வேண்டுமென்றார்.
- இதன் விளைவாக காலனிய நிர்வாகம் ஆங்கில பள்ளிகளையும் கல்லூரிகளையும் நிறுவியது.

32. சுதேசி இயக்கத்தின் போது அதிகரித்த தனிநபர் வன்முறைகளுக்கான காரணங்களை எழுதுக.
- இளைஞர்கள் அரசியலற்ற ஆக்கசார் செயல்பாடுகளை ஓரளவே ஏற்றுக் கொண்டனர்.
- இளவயதினரை ஒரு நீண்டகால வெகுஜன போராட்டத்தில் ஈடுபடுத்துவதில் ஏற்பட்ட தோல்வி.
- புரட்சிகர செயல்பாடானது இந்திய வீரத்தை மீட்டெடுக்கும் முயற்சியாக கருதப்பட்டது.
- இதனை ஆங்கிலேயர் எதிர்ப்பதாகவும், இகழ்வதாகவும் புரட்சிகர தேசியவாதிகள் நம்பினர்.

33. 1920 மார்ச்சில் நடைபெற்ற பாரிஸ் அமைதி மாநாட்டில் கிலாஃபத் இயக்கத்தின் சார்பாக முன் வைக்கப்பட்ட கோரிக்கைகள் என்ன?
- துருக்கியின் சுல்தான் கலீபாவாக தொடரவேண்டும்.
- இசுலாமியப் புனிதத்தலங்கள் சுல்தானிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்.
- சுல்தானிடம் போதுமானப் பகுதிகள் தரப்பட வேண்டும்.
- அராபியா, சிரியா, ஈராக், பாலஸ்தீனம் ஆகியன சுல்தானின் கட்டுபாட்டிலிருக்க வேண்டும்

34. தென்னிந்தியாவில் தொழிற்சங்கங்களின் வளர்ச்சிக்காகச் சிங்காரவேலர் ஆற்றிய பங்களிப்புக் குறித்து எழுதுக.
- திரு. வி. கல்யாணசுந்தரத்துடன் இணைந்து தென்னிந்தியாவில் பல தொழிற்சங்கங்களை தோற்றுவித்தார்.
- முதன்முறையாக நாட்டில் மே தினத்தைக் கொண்டாடினார்.
- 1925இல் கம்யூனிஸ்ட் குழுக்களின் மாநாட்டில் கலந்து கொண்டார்.
- 1928ஆம் ஆண்டு தென்னிந்திய ரயில்வே வேலை நிறுத்தத்தை ஏற்பாடு செய்தார் .

35. பஞ்சசீலக் கொள்கையின் ஐந்து கோட்பாடுகளை விளக்குக.
- நாடுகள் ஒன்றுக்கொன்று அவற்றின் இறையாண்மையை மதித்து நடத்தல்.
- நாடுகள் ஒன்றையொன்று ஆக்கிரமிக்காமல் இருத்தல்.
- ஒரு நாடு மற்றொரு நாட்டின் உள் நிகழ்வுகளில் தலையிடாமல் இருத்தல்.
- நாடுகளுக்கு இடையேயான சமத்துவம் மற்றும் கூட்டுறவு.
- சமாதான சகவாழ்வு

www.Padasalai.Net

36. இந்திய வேளாண்மையின் பின்தங்கிய நிலைக்கானகாரணங்கள் யாவை?

- வேளாண்மையின் பின்தங்கிய நிலைக்கான காரணத்தை நிறுவன அடிப்படையிலான காரணி, தொழில்நுட்பம் சார்ந்தகாரணி என பிரிக்கலாம்.
- நிறுவனம் சார்ந்த காரணிகள் என்பது, நிலவுடைமை வர்க்கத்தை சேர்ந்தோருக்கும் விவசாயத் தொழிலாளர் வர்க்கத்தைச் சேர்ந்தோருக்குமிடையே நிலவிய சமூக பொருளாதார சிக்கல்.
- தொழில்நுட்பக் காரணிகள் என்பது சிறந்த விதைகள், ரசாயன உரங்கள், டிராக்டர் மற்றும் அறுவடை இயந்திரம், நீர்ப்பாசனவசதிகள் போன்றவற்றை பயன்படுத்தாமை ஆகும்.

37. பிரான்ஸ் தும்மினால், ஐரோப்பாவிற்கு ஜலதோஷம் - தெளிவுபடுத்துக.

- பத்தொன்பதாம் நூற்றாண்டில் பிரான்ஸ் நாட்டில் நடந்த பல நிகழ்வுகள் ஐரோப்பிய கண்டம் முழுதும் ஒரு தாக்கத்தை ஏற்படுத்தியது.
- ஐரோப்பாவில் எழுந்த மக்களாட்சி உணர்வையும், தேசியவாதப் போக்கையும் ஒடுக்க முனைந்தவர் மெட்டர்னிக் ஆவார்.
- அவர் கூற்றானது: "பிரான்ஸ் தும்மினால், ஐரோப்பாவிற்கு ஜலதோஷம் பிடிக்கும்.'
- அதன்படி பிரான்சில் மும்முறை புரட்சி வெடித்த ஆண்டுகளான 1789, 1830, மற்றும் 1848களில் பிரான்ஸ் தும்மியதாகவே கருத்தில் கொள்ள வேண்டும்.

38. இரண்டாம் உலகப்போரின் முக்கிய விளைவுகளை முன்னிலைப்படுத்துக.

- பெரும் சக்தி என்ற நிலையில் இருந்து ஜெர்மனி வீழ்ந்தது.
- ஐரோப்பா தனது அந்தஸ்தையும், கௌரவத்தையும் இழந்தது.
- பொருளாதாரம் சரிந்து நொறுங்கியது.
- உலகின் இரு ஆதிக்க சக்திகளாக அமெரிக்க ஐக்கிய நாடும் சோவியத் ரஷ்யாவும் உருவானது.

39. சூயஸ் கால்வாய் சிக்கல் குறித்து சுருக்கமாக வரைக

- 1956 இல் எகிப்தின் குடியரசுத்தலைவரான நாசர் சூயஸ் கால்வாயை தேசியமயமாக்கினார்.
- இக்கால்வாய் ஆங்கிலோ - பிரெஞ்சு சூயஸ் கால்வாய் கழகத்திற்குச் சொந்தமாக இருந்தது.
- எனவே இஸ்ரேலிய, பிரிட்டிஷ் மற்றும் பிரான்ஸ் படைகள் சினாய் தீபகற்பம் மீது படையெடுத்தன.
- ஐ.நா.சபையின் படைகள் இஸ்ரேலிய, பிரிட்டிஷ் மற்றும் பிரெஞ்சுப் படைகளை வெளியேற்றின.

40. முதல் உலகப்போரின் முடிவில் தோல்வியுற்ற நாடுகளின் மீது திணிக்கப்பட்ட உடன்படிக்கைகள் ஏதேனும் மூன்றினை எழுதுக.

- வெர்செய்லஸ் உடன்படிக்கை : ஜெர்மனி.
- செயின்ட் ஜெர்மன் உடன்படிக்கை : ஆஸ்திரியா
- டிரயனான் உடன்படிக்கை : ஹங்கேரி
- நியூல்லி உடன்படிக்கை : பல்கேரியா
- செவ்ரஸ் உடன்படிக்கை : துருக்கி

IV. அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 7 X 5 = 35

41. அ) இந்தியாவில் தேசிய விழிப்புணர்வுக்குப் பிரிட்டிஷாரின் அடக்குமுறை மற்றும் இனவெறிக் கொள்கைகள், எந்த அளவிற்குக் காரணமாக இருந்தன?

<u>குடிமைப் பணிக்கானத் தேர்வுகள்</u> :

- அரசு உயர்பதவிகளில் இந்தியர்களைப் பணியமர்த்தாமல் திட்டமிட்டு விலக்கி வைக்கப்பட்டதை மக்கள் இந்திய எதிர்ப்புக் கொள்கையின் நடவடிக்கையாகக் கருதினர்.
- குடிமைப் பணிக்கானத் தேர்வுகள் அறிமுகமானபோது வயது வரம்பு 21 என நிர்ணயம் செய்யப்பட்டது.
- இத்தேர்வுகளில் இந்தியர்கள் வெற்றி பெற்றதைத் தொடர்ந்து இத்தேர்வுகளை இந்தியர்கள் எழுதவிடாமல் தடுப்பதற்காக வயது வரம்பு 19 என குறைக்கப்பட்டது.

<u>அடக்குமுறைச் சட்டங்கள்</u> :

- இந்திய தண்டனைச் சட்டம் (1870) பிரிவு 124A அடக்குமுறை ஒழுங்காற்றுச் சட்டம்.
- பிராந்திய மொழிச் சட்டம் (1878) ஆகியன எதிர்ப்புகளைத் தூண்டின.

<u>சுரண்டல் நடவடிக்கைகள்</u> :

- இங்கிலாந்திலிருந்து இறக்குமதி செய்யப்படும் பருத்தியிழைத் துணிகளின் மீதான சுங்கவரி குறைக்கப்பட்டது.
- இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் பருத்தியிழைத் துணிகளின் மீதான உள்நாட்டுத் தீர்வை உயர்த்தப்பட்டது.

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



இல்பர்ட் மசோதா :

- இம்மசோதாவின் மூலம் இந்திய நீதிபதிகள் ஐரோப்பியர்களை விசாரிக்க அதிகாரம் பெற்றனர்.
- ஆனால் ஐரோப்பியர் எதிர்ப்பால் இம்மசோதாவில் திருத்தம் செய்யப்பட்டது.
- இல்பர்ட் மசோதா சர்ச்சை இந்திய தேசியத்தின் எழுச்சிக்கு ஒரு காரணமாய் அமைந்தது.

( அல்லது )

ஆ) இந்திய தேசிய இயக்கத்தில் வ.உ. சிதம்பரத்தின் பங்கினைப் பற்றி எழுதுக.

சுதேசி கப்பல் கம்பெனி நிறுவுதல் :

- ஆங்கிலேயரின் கடற்பயண முற்றுரிமைக்கு எதிராகச் சுதேசி கப்பல் கம்பெனி ஒன்றை ஏற்படுத்த வேண்டுமென்றார்.
- அதன்படி சுதேசி நீராவிக் கப்பல் கம்பெனி எனும் கூட்டுப்பங்கு நிறுவனத்தைப் பதிவு செய்தார்.
- வ.உ.சி. S.S.கலியா, S.S.லாவோ என்னும் இரண்டு நீராவிக் கப்பல்களை வாங்கியபோது தமிழ்நாட்டின் சுதேசி இயக்கம் தேசத்தின் கவனத்தைப் பெற்றது.
- சுதேச இயக்கத்திற்கு ஆதரவாக இந்தியாவின் பண்டைய கடற்பயணப் பெருமைகளை துணையாகக் கொண்டார்.

கோரல்மில் தொழிலாளர் போராட்டம் :

- கோரல்மில் தொழிலாளர்களின் படுமோசமான வேலை, வாழ்க்கைச் சூழல்கள் போன்றவை வ.உ.சி., சிவா ஆகியோரின் கவனத்தைக் கவர்ந்தது.
- இருவரின் உரைகளால் தூண்டப்பெற்ற தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டனர்.
- வேலை நிறுத்தத்தை ஒடுக்க நினைத்த அரசு ஆலை நிர்வாகத்திற்கு ஆதரவாக இருந்தது.
- முடிவில் ஆலை முதலாளிகள் தொழிலாளர்களின் கோரிக்கைகளை ஏற்றுக் கொள்ள முடிவு செய்தனர்.

பிபின் சந்திரபாலின் விடுதலையை கொண்டாடுதல் :

- பிபின் சந்திரபாலின் விடுதலையை சுதேசி தினமாக திருநெல்வேலியில் தடையை மீறி கொண்டாடினார்.
- இதன் விளைவாக தேச துரோக குற்றத்திற்காக வ. உ. சி கைது செய்யப்பட்டார்.
- விசாரணையின் முடிவில் வ. உ. சி இரட்டை ஆயுள் தண்டனை விதிக்கப் பெற்றார்.

42. அ இந்திய விடுதலைப் போரில் மகாத்மா காந்தியடிகளின் பங்கினை மதிப்பிடுக.

காந்தியடிகளின் தொடக்ககால போராட்டங்கள் :

- சம்ப்ரான் விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று இந்திய மக்களை ஒன்றிணைக்கும் முதல் முயற்சியை மேற்கொண்டார்.
- அகமதாபாத் ஆலைத் தொழிலாளர்களுக்கு ஆதரவாக போராடி 35 % ஊதிய உயர்வு பெற்றுத் தந்தார்.
- பருவமழை பொய்த்ததன் காரணமாக கேதா மாவட்ட விவசாயிகளுக்கு நிலவரி செலுத்துவதிலிருந்து விலக்கு பெற்றுத் தந்தார்.

கிலாபத் இயக்கம் மற்றும் ஒத்துழையாமை இயக்கம் :

- ரௌலட் சட்டத்துக்கு எதிராக வேலை நிறுத்தத்தை கடைபிடிக்குமாறு அழைப்பு விடுத்தார்.
- இந்துக்களையும் முஸ்லீம்களையும் ஒன்றிணைந்த கிலாபத் இயக்கத்தை இத்துடன் இணைத்தார்.
- கிலாபத் மாநாட்டில் ஒத்துழையாமை இயக்கத்தை தொடங்க வலியுறுத்தினார்.
- வன்முறையற்ற வகையில் ஒத்துழையாமை இயக்கத்தை பின்பற்றினால் ஓராண்டுக்குள் சுயராஜ்யத்தை பெற்று தருவேன் என்றார்.

சட்ட மறுப்பு இயக்கமும், பூனா ஒப்பந்தமும் :

- சட்ட மறுப்பு இயக்கத்தின் ஒரு பகுதியாக தண்டி யாத்திரையை மேற்கொண்டார்.
- சபர்மதி ஆசிரமத்திலிருந்து தண்டி கடற்கரைக்கு நடைபயணம் மேற்கொண்டு உப்பு வரிச் சட்டத்தை மீறினார்.
- பிரிட்டிஷார் அளித்த வகுப்புவாரித் தொகுதி ஒதுக்கீட்டிற்கு எதிர்ப்பு தெரிவித்துக் காந்தியடிகள் சாகும்வரை உண்ணாவிரதம், மேற்கொண்டார்.
- பின்னர், காந்தியடிகள் மற்றும் அம்பேத்கர் இடையே பூனாஒப்பந்தம் கையெழுத்தானது.

தனிநபர் சத்தியாகிரகமும், வெள்ளையனே வெளியேறு இயக்கமும் :

- இரண்டாம் உலகப்போர் நடைபெற்ற காலத்தில் தனிநபர் சாத்தியகிரகத்தை தொடங்கினார்.
- தனிநபர் சத்தியாகிரகம் என்பது ஆகஸ்ட் கொடைக்கு காங்கிரஸ் கொடுத்த பதிலடியாகும்.
- கிரிப்ஸ் தூதுக்குழுவின் அறிக்கையை ஏற்க மறுத்து வெள்ளையனே வெளியேறு இயக்கத்தை தொடங்கினார்.
- மக்களை நோக்கி செய் அல்லது செத்துமடி என்று கூறினார்.

( அல்லது )

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

ஆ) பொருளாதாரப் பெரும்மந்தம் ஏற்பட்டபோது சமூக, பொருளாதார மற்றும் அரசியல் லட்சியங்கள் வெளிப்படுத்துவதில் இந்திய தேசிய காங்கிரசின் கராச்சி மாநாட்டின் முக்கியத்துவத்தை ஆய்வு செய்க.

- உலக அளவிலான பொருளாதார பெருமந்தத்தால் விவசாயிகள் பெருமளவில் பாதிக்கப்பட்டனர்.
- எனவே காங்கிரஸ் தனது சட்டமறுப்பு இயக்கத்தின் ஒரு பகுதியாக குத்தகை மற்றும் வரிசெலுத்தாப் போராட்டத்தைக் கடைபிடித்தது.
- பெருமந்த அழுத்தத்தினால் ஏற்பட்ட சமூக-பொருளாதாரத் தேவைகள் கராச்சியின் காங்கிரஸ் அமர்வில் தீவிரமாய் பேசப்பட்டது.
- விவசாயிகள் கிசான் சபா எனப்படும் விவசாயிகள் சங்கத்தில் தங்களை இணைத்துக் கொண்டு போராடினர்.
- தொழிலாளர்கள் தங்களை தொழிற்சங்கங்களில் இணைத்துக் கொண்டு போராடினர்.
- நேருவின் தலைமையின் கீழ் வந்த காங்கிரஸ் சமூக மற்றும் பொருளாதார நீதி அடிப்படையில் ஒரு சமத்துவ சமூகத்தைப் பற்றிப் பேச ஆரம்பித்தது.
- இச்சூழ்நிலையில் 1931இல் நடந்த கராச்சி அமர்வு சர்தார் வல்லபாய் படேல் தலைமையில் அடிப்படை உரிமைகள் மற்றும் கடமைகளில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியது.
- இம்மாநாடு சுதந்திர இந்தியாவின் பொருளாதார கொள்கை பற்றிய ஒரு பார்வையை வழங்கியது.
- பின்னர் இதுவே சுதந்திர இந்தியாவிற்கான இந்திய தேசிய காங்கிரசின் கொள்கை விளக்கமானது.
- அரசியல் சுதந்திரம் மற்றும் பொருளாதாரச் சுதந்திரம் என்பது பிரித்துப்பார்க்க முடியாத ஒன்றாகும் என மாநாடு தெளிவுபடுத்தியது.

43. அ சுதந்திரப் போராட்டத்தை இந்திய தேசிய இராணுவ விசாரணை எவ்வாறு தீவிரப்படுத்தியது?

<u>காங்கிரசின் பங்களிப்பு</u> :

- காங்கிரஸ் சிறந்த சட்ட நிபுணர்களைக் கொண்டு இந்திய தேசிய ராணுவத்தினருக்காக வாதாடியது.
- இந்திய தேசிய ராணுவ வீரர்களின் சார்பில் ஜவஹர்லால் நேரு வாதாடினார்.
- தேர்தல் கூட்டங்களில் ஒட்டு கேட்பதை விட பெரும்பாலும் இந்த விசாரணையை பற்றியே பேசப்பட்டது.

<u>பத்திரிக்கைகளின் பங்களிப்பு</u> :

- இந்திய பத்திரிக்கைகள் யாவும் இவ்விசாரணையை உணர்ச்சிகரமாக வெளியிட்டன.
- இவ்விசாரணையை தலையங்கமாக வெளியிட்டு அவர்களின் விடுதலையை வலியுறுத்தின.

<u>பொதுமக்களின் பங்களிப்பு</u> :

- இந்திய தேசிய ராணுவ வாரம் கடைபிடிக்கப்பட்டு வீரர்களின் விடுதலை வலியுறுத்தப்பட்டது.
- ஊர்வலங்களும், கடையடைப்புகளும், பொது வேலைநிறுத்தங்களும் நடைபெற்றன.
- சிறைப்பட்ட வீரர்களின் வழக்கு செலவிற்காக நிதி திரட்டப்பட்டது.

<u>விசாரணையின் முடிவு</u> :

- இவ்விசாரணை பொதுமக்களை பெரிதும் கவர்ந்ததோடு ஒரு தாக்கத்தையும் ஏற்படுத்தியது.
- விசாரணை நீதிமன்றம் ஷெகல் தில்லான், ஷா நவாஸ்கான் ஆகியோரின் குற்றத்தை உறுதி செய்து தண்டனை வழங்கியது.
- முப்படைகளின் தளபதி அவர்களின் தண்டனையை குறைத்து பின்னர் அவர்களை விடுவித்தார்.

( அல்லது )

ஆ) இந்து தேசியம், இஸ்லாமிய தேசியம் மற்றும் இந்திய தேசியம் ஆகியவை இந்தியப் பிரிவினைக்கு சமபங்காற்றியது எவ்வாறு?

<u>இந்தியப் பிரிவினைக்கு இந்து தேசியத்தின் பங்கு</u>

- பஞ்சாப் மாகாணம் இந்து, முஸ்லிம் மாகாணங்களாகப் பிரிக்கப்பட வேண்டுமென லாலாலஜபதிராய் வெளிப்படையாகக் கூறினார்.
- அரசியல் களத்தில் இந்துமகாசபை 'அகண்ட இந்துஸ்தான்' என்னும் முழக்கத்தை முன் வைத்தது.
- "இந்துஸ்தானிலுள்ள இந்துக்கள் அல்லாத மக்கள் இந்து பண்பாட்டையும் மொழியையும் ஏற்றுக்கொள்ள வேண்டும்" என்று ( R.S.S ) கூறினர்.

<u>இந்தியப் பிரிவினைக்கு இஸ்லாமிய தேசியத்தின் பங்கு</u>

- சுதேசி இயக்கத்தை ஆதரித்த முஸ்லிம்கள் காங்கிரஸின் தரகர்கள் என்ற கண்டனத்திற்கு உள்ளாயினர்.
- கிலாபத் இயக்கத்தின்போது மத ரீதியாக மக்களைத் திரட்டும் பணியில் முஸ்லிம்கள் ஈடுபட்டனர்
- தேசியவாத முஸ்லீம்களின் செயல்பாடுகள் இஸ்லாமுக்கு எதிரானதென சிறுமைப்படுத்தப்பட்டன.

<u>இந்தியப் பிரிவினைக்கு இந்திய தேசியத்தின் பங்கு</u>

- காங்கிரஸ், சமயச்சார்பின்மையில் உறுதியாக இருந்த போதிலும் அதனுடைய உறுப்பினர்கள் இந்து வகுப்புவாத அமைப்புகளில் செயல்படுவதைத் தடுக்க இயலவில்லை.
- ஆரிய சமாஜத்தின் நடவடிக்கைகளில் காங்கிரசாரின் பங்கேற்பு இந்து, முஸ்லிம்களை பிரிவுபடுத்தியது.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

- திலகர், அரவிந்தகோஷ் மற்றும் லாலாலஜபதி ராய் ஆகியோர் சமய அடையாளங்கள் மூலம் இந்திய தேசியத்தை வளர்த்தனர்.

44. அ( இத்தாலிய இணைவு எவ்வாறு சாத்தியமாக்கப்பட்டது?

<u>இத்தாலிய இணைவின் தொடக்கம்</u> :

- நெப்போலியனின் ஆட்சி ஒரே சீரான நிர்வாகத்தை வழங்கியமையால் இத்தாலியில் ஒருமைப்பாட்டுணர்வு ஏற்பட்டது.
- சுதந்திர கருத்துக்களையும், நாட்டுப்பற்றையும் வலியுறுத்திய கார்பொனாரி போன்ற இரகசிய குழுக்கள் அதிகமாகப் பரவியது.
- மாஸினி, கவூர், கரிபால்டி ஆகிய மூவரும் இத்தாலிய ஒருங்கிணைவிற்கான முக்கிய ஆளுமைகளாக திகழ்ந்தனர்.

<u>ஆஸ்திரியவுடனான போர்</u> :

- பிரான்சுடன் இணைந்து பியட்மாண்ட் - சார்டினிய படைகள் ஆஸ்திரியாவைத் தோற்கடித்தன.
- ஆஸ்திரியவுடனான போரின் முடிவில் சூரிச் உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது.
- சூரிச் உடன்படிக்கையின்படி லம்பார்டியை பெற்றது.

<u>பொதுவாக்கெடுப்பு</u> :

- பொதுவாக்கெடுப்பின் வாயிலாக பியட்மாண்ட் -- சார்டினிய இராஜ்ஜியத்தோடு பார்மா, மொடினா, டஸ்கனி ஆகியவை இணைக்கப்பட்டன.
- அதே போன்று போப்பாண்டவரின் பகுதிகளில் பொதுவாக்கெடுப்பு மேற்கொண்டு சிசிலி, நேப்பிள்ஸ் ஆகியவை பியட்மாண்ட் - சார்டினியாவோடு இணைக்கப்பட்டன.

<u>வெனிஷியா இணைக்கப்படல்</u> :

- ஆஸ்திரியப்-பிரஷ்யப் போரில் பிரஷ்யாவோடு இத்தாலி இணைந்து செயல்பட்டது.
- இப்போரில் பிரஷ்யா வெற்றி பெற்றமையால் அது வெனிஷியாவை பரிசாகப் பெற்றது.

<u>ரோம் இணைக்கப்படல்</u> :

- பிரெஞ்சுப் படைகள் பிராங்கோ- பிரஷ்யப் போரில் பின்னடைவைச் சந்தித்தது.
- இதன் விளைவாக பிரான்சு ரோமைவிட்டு அகன்ற போது இத்தாலி ரோமை இணைத்துக் கொண்டது.
- இவ்வாறாக இத்தாலி ஐக்கியம் முழுமையடைந்தது.

( அல்லது )

ஆ) இந்திய விடுதலைக்குப் பின் ஏற்பட்ட அறிவியல் ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப நிறுவனங்கள் வளர்ச்சி குறித்து ஆய்க.

<u>அறிவியல் ஆய்வகங்கள்</u> :

- கணிதம் மற்றும் அறிவியல் துறைகளில் ஆய்வுகளை ஊக்குவிப்பதற்காக டாட்டா அடிப்படை ஆராய்ச்சி நிறுவனம் அமைக்கப்பட்டது.
- புனே தேசிய வேதியியல் ஆய்வகம், புதுதில்லி தேசிய இயற்பியல் ஆய்வகம் ஆகியன ஏற்படுத்தப்பட்டன.

<u>அறிவியல் மற்றும் தொழிலக ஆய்வு மன்றம் (CSIR )</u> :

- அறிவியல் மற்றும் தொழிலக ஆய்வு மன்றம் எனும் ஒரு குடையின் கீழ்பெரும்பாலான ஆய்வு நிறுவனங்கள் இயங்கி வருகின்றன.
- இவ்வமைப்பு இயந்திரங்கள், மருந்துகள் விமானங்கள் ஆகியவை குறித்த ஆய்வினை முன்னெடுக்கிறது.

<u>அணுசக்தி ஆணையம்</u> :

- அணுசக்தி ஆணையமானது அணு அறிவியலின் வளர்ச்சிக்கு மையமாகத் திகழ்கிறது.
- இது அணுசக்தி உற்பத்தி மற்றும் அணு ஆயுத உற்பத்தி ஆகியவற்றின் மீது கவனம் செலுத்தியது.

<u>இந்திய வேளாண் ஆய்வு கழகம்</u> :

- வேளாண்மை துறையில் நடைபெறும் ஆய்வுகளை இந்திய வேளாண் ஆய்வுக்கழகம் ஒருங்கிணைக்கிறது.
- மீன்வளர்ப்பு, வனங்கள், பால்வளம், தாவர மரபியல், ஆகியன இதன் துணை நடவடிக்கைகளாகும்.

<u>தொழில்நுட்ப நிறுவனங்கள்</u> :

- இந்தியத் தொழில்நுட்ப நிறுவனங்கள் பொறியியலின் வெவ்வேறு பிரிவுகளுக்காக நிறுவப் பெற்ற சிறப்பு நிறுவனங்களாகும்.
- முதல் IIT கரக்பூரில் நிறுவப்பெற்றது. அதனைத் தொடர்ந்து டெல்லி, பம்பாய், கான்பூர் மற்றும் சென்னை ஆகிய இடங்களில் IIT உருவாக்கப்பட்டன.

45. அ கிழக்குப் பகுதிக்கு புதிய கடல் வழித்தடங்களை கண்டுபிடிப்பதில் போர்த்துகல் மற்றும் ஸ்பெயின் ஆகிய நாடுகளின் முன்முயற்சிகளை விவரிக்கவும். நவீன உலகின் பொருளாதார வரலாற்றில் ஏன் இது மிக முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வாக கருதப்படுகிறது?

<u>புதிய கடல் வழித்தடங்களை கண்டுபிடிப்பதில் போர்ச்சுக்கல்லின் பங்களிப்பு</u> :

- கானரி, மெடீரா, அசோர் ஆகிய தீவுகளை முதல் ஆய்விலேயே போர்த்துகல் கண்டுபிடித்தது.
- மாலுமி ஹென்றியால் அனுப்பப்பட்ட மாலுமிகள் ஆப்பிரிக்காவின் கடற்கரைப் பகுதியான கினியாவைச் சென்றடைந்தனர்.
- பார்தோலோமியோ டயஸ் நன்னம்பிக்கை முனையை சுற்றி வந்தார்.
- வாஸ்கோடகாமா மொசாம்பிக் தீவை சென்றடைந்தார்.
- இந்தியாவின் ஒரு பகுதியை அடைந்த வாஸ்கோடகாமா இந்தியாவுடனான நேரடி வர்த்தக வாய்ப்புகளை திறந்துவிட்டார்.
- வாஸ்கோடகாமா சென்ற வழியைப் பின்பற்றி இந்தியாவுக்குப் பயணித்த காப்ரல் கோழிக்கோட்டை சென்றடைந்தார்.

<u>புதிய கடல் வழித்தடங்களை கண்டுபிடிப்பதில் ஸ்பெயினின் பங்களிப்பு</u> :

- 1492 இல் கொலம்பஸ் அமெரிக்க நிலப்பகுதியை வந்தடைந்தார்.
- மெகல்லன் ஸ்பெயினின் ஆதரவைப் பெற்று மேற்கு நோக்கி புறப்பட்டார்.
- அவரது விட்டோரியா கப்பல் உலகை வலம் வந்த முதல் கப்பல் பெருமையைப் பெற்றது.

<u>நவீன உலகின் பொருளாதார வரலாற்றில் இதன் முக்கியத்துவம்</u> :

- இதற்கு முன்பாக கீழை நாடுகளுடனான கடல்வழி வாணிபத்தை அராபியர்களே கட்டுப்படுத்தி வந்தனர்.
- அரேபியர்களிடமிருந்து இத்தாலியர்கள் பொருட்களைப் பெற்று ஐரோப்பிய நாடுகளில் வர்த்தகம் செய்தனர்.
- ஆனால் புதிய கடல் வழி கண்டுபிடிப்புகள் கீழை நாடுகளுடன் ஐரோப்பியர்கள் நேரடியாக வாணிபம் செய்ய வழிவகுத்தது.
- இதன் மூலம் ஐரோப்பிய நாடுகள் அதிக இலாபத்தை சம்பாதிக்கும் முயற்சியில் ஈடுபட்டன.

( அல்லது )

ஆ) அமெரிக்க விடுதலைப் போருக்கான காரணங்கள், அதன் போக்கு, விளைவுகள் குறித்து விவாதிக்கவும்.

<u>காரணங்கள்</u> :

- நாவாய் சட்டங்கள், சர்க்கரை வரி, முத்திரைச் சட்டம், டவுன்ஷெண்ட் சட்டம், தேயிலை வரி, பொறுத்துக்கொள்ள முடியாத சட்டங்கள் ஆகியவற்றை தனது அமெரிக்க குடியேற்றங்கள் மீது இங்கிலாந்து திணித்தது.
- மேற்கண்ட பொறுத்துக்கொள்ள முடியாத சட்டங்கள் நீக்கப்பட வேண்டுமென குடியேற்றங்களின் பிரதிநிதிகள் கோரிக்கை வைத்தனர்.
- அவர்கள் இங்கிலாந்து அரசர் மூன்றாம் ஜார்ஜுக்கு கோரிக்கை மனுவொன்றை ஒரு ஆலிவ் கிளையோடு அனுப்பி வைத்தனர்.
- ஆனால் அக்கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து அமெரிக்க விடுதலைப்போர் தொடங்கியது.

<u>போக்கு</u> :

- ஆங்கிலேயப் படைகளுக்கு வில்லியம் ஹோவ் தலைமை தாங்கினார்.
- அமெரிக்கப் படைகளுக்கு ஜார்ஜ் வாஷிங்டன் தலைமையேற்றார்.
- சரடோகா போர் முனையில் ஆங்கிலேயப் படைத்தளபதி ஜெனரல் புர்கோய்ன் சரணடைய நிர்ப்பந்திக்கப்பட்டார்.
- இறுதியில் யார்க்டவுனில் இங்கிலாந்துப் படைகள் அமெரிக்க படைகளிடம் சரணடைந்தன.

<u>விளைவுகள்</u> :

- இங்கிலாந்துக்கும் அமெரிக்காவுக்குமிடையே பாரிசில் அமைதி உடன்படிக்கை கையெழுத்தானது.
- அமெரிக்காவின் சுதந்திரத்தை பிரிட்டன் அங்கீகரித்தது.
- ஜார்ஜ் வாஷிங்டன் அமெரிக்காவின் முதல் குடியரசுத் தலைவரானார்.
- இங்கிலாந்து பிரதமர் நார்த் பிரபு தனது பதவியை ராஜினாமா செய்தார்.
- அரசர் ஜார்ஜ் மக்கள் சபை மீதான தன் கட்டுப்பாட்டை இழந்தார்.

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

46. அ) இரண்டாம் உலகப்போர் ஏற்பட ஜெர்மனியும், ஹிட்லரும் எந்த அளவிக்குக் காரணமாவார்கள் என்பதனை ஆய்ந்து கூறுக.

<u>சார் பள்ளத்தாக்கு மற்றும் ரைன்லாந்து இணைப்பு</u> :

- வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின்படி ஸார் பகுதியில் பொதுவாக்கெடுப்பு நடத்தி அதனை ஜெர்மனியோடு இணைத்தார்.
- வெர்செய்ல்ஸ் ஒப்பந்தத்தை மீறி ஹிட்லர் மீண்டும் ரைன்லாந்தில் இராணுவத்தை குவித்தார்.

<u>ஆஸ்திரியா இணைப்பு</u> :

- ஹிட்லரின் நிர்ப்பந்தத்தால் ஆஸ்திரியாவில் நாஜி அரசு ஏற்படுத்தப்பட்டது.
- ஜெர்மானிய படைகள் வியன்னாவிற்குள் நுழைந்து அந்நாட்டின் மீது கட்டுப்பாட்டை ஏற்படுத்தின.

<u>செக்கோஸ்லோவாக்கியா மீதான தாக்குதல்</u> :

- சூடட்டன்லாந்தில் வாழும் ஜெர்மானியர்கள் ஒடுக்கப்படுகின்றனர் என்று ஹிட்லர் குற்றம் சாட்டினார்.
- எனவே சூடட்டன்லாந்தை இராணுவத்தை கொண்டு ஆக்கிரமித்தார்.
- செக்கோஸ்லோவாக்கியாவிற்குள் ஏற்பட்ட முரண்போக்கை காரணம்காட்டி ஹிட்லர் அங்கு ஜெர்மானியப் படைகளை அனுப்பினார்.

<u>போலந்து மீதான தாக்குதல்</u> :

- போலந்தில் வாழும் ஜெர்மானியர்கள் ஒடுக்கப்படுகின்றனர் என்று ஹிட்லர் குற்றம் சாட்டினார்.
- போலந்தை ஆக்கிரமிக்கும் நோக்கோடு 1939 செப்டம்பர் 1இல் போலந்தின் மீது ஹிட்லர் தாக்குதல் நடத்தினார்.
- போலந்திலிருந்து ஜெர்மனியை வெளியேற பிரிட்டன் விடுத்த இறுதி எச்சரிக்கை புறக்கணிக்கப்பட்டதால் இரண்டாம் உலகப்போர் மூண்டது.

( அல்லது )

47 அ அணிசேரா இயக்கத்தின் இலக்குகளையும் நோக்கங்களையும் கோடிட்டுக் காட்டவும்.

- அடிப்படை மனித உரிமைகளை மதித்தல்.
- ஐக்கிய நாடுகள் சபையின் சாசனத்தின் கொள்கைகளையும் நோக்கங்களையும் மதித்தல்.
- அனைத்து நாடுகளின் இறையாண்மையையும் அவற்றின் எல்லைப்பரப்பு ஒருமைப்பாட்டையும் மதித்தல்.
- அனைத்து இனங்களும், அனைத்து நாடுகளும் சமம் என அங்கீகரித்தல்.
- அடுத்தநாட்டின் உள்விவகாரங்களில் தலையிடாமலும் குறுக்கீடு செய்யாமலும் இருத்தல்.
- கூட்டுப்பாதுகாப்பு உடன்படிக்கைகளை பயன்படுத்தாதிருத்தல்.
- ஒருநாடு மற்றநாடுகளுக்கு எதிராக நெருக்கடிகளை தருதல் என்பதைப் பயன்படுத்தக்கூடாது.
- அனைத்துப் பன்னாட்டுப் பிரச்சனைகளுக்கும் அமைதியான வழியில் தீர்வு காணப்படவேண்டும்.
- பரஸ்பர அக்கறை, ஒத்துழைப்பு ஆகியவற்றை மேம்படுத்துதல்.
- நீதி மற்றும் பன்னாட்டு கட்டுப்பாடுகளுக்கு மதிப்பளித்தல்.


www.Padasalai.Net

மா.வெங்கடேசன் M.A.,M.Phil., B.Ed. முதுகலை ஆசிரியர் ( வரலாறு ) அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, அயப்பாக்கம்.


**46. ஆ) இரண்டாம் உலகப்போரில் நடைபெற்ற ஏதேனும் ஐந்து நிகழ்வுகளை காலக்கோடு வரைந்து காட்டுக.**

மா. வெங்கடேசன் முதுகலை ஆசிரியர் ( வரலாறு ) அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, அயப்பாக்கம்.

## இரண்டாம் உலகப்போர் ( 1939 - 1945 )



47. ஆ) கொடுக்கப்பட்டுள்ள உலக வரைபடத்தில் முதல் உலகப்போரில் பங்குபெற்ற பின்வரும் நாடுகளை குறித்துக் காட்டுக. 1. ஜெர்மனி 2. இத்தாலி 3. அமெரிக்க ஐக்கிய நாடுகள் 4. துருக்கி 5. ஆஸ்திரியா




Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com